REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மாசி 3உ வெள்ளி (16—3—56) ★ ★ வெளியூர்: பங்குனி 4உ சனி (17—3—56) [இதழ் 234

தி. கொ.-வில் குடியரசுத் தலைவர் ஆட்சி

வரும் மார்ச் 22-ந் தேதியன்று இரவு திரு-கொச்சியில், குடியரசுத் தலைவரின் நேரடி ஆட்சி பிரகடனப்படுத்தப்படும் என்று நம்பகமாகத் தெரியவருகிறது.

22-ந் தேதியன்று பகல் கடைசி முறையாக சட்டசபை கூடி, மாநிலங்கள் சபைக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் என்றும் தெரியவருகிறது.

டெல்லி புரியும் மற்றோர் வஞ்சனை

1,145 விவசாயிகளின் வருமானம்: ஒரு தனி நபர் பெறுகின்ற விந்தை

சோஷலிசமாதிரிசமுதாயம் வெறும் கனவுதானா?

சமூகத்தில் பெரும் பிளவு குறித்து காங்கிரஸ் உறுப்பினர் இடித்துரை

கல்கத்தா, மார்ச் 15—

ஒரு பெரும் தொழில் நிறுவனத்தின் நிர்வாக அதிகாரிக்குக் கிடைக்கும் வருமானம் எவ்வளவு தெரியுமா?

1,145 விவசாயிகளுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்தில் எவ்வளவு வருமானம் கிடைக்கிறதோ, அந்த அளவு வருமானம் ஒரு தனி நபருக்கு, தொழில் நிர்வாகியாக இருக்கும்போது கிடைக்கிறது.

இந்தத் தகவலை, சவி முகர்ஜி என்ற காங்கிரஸ் உறுப்பினர், மேற்கு வங்க சட்டசபையில் தந்திருக்கிறார்.

"உற்பத்தியாகும் செல்வம், சம அளவில் பங்கிட்டுத்தரப்படவில்லையானால் சோஷலிச மாதிரி என்ற சமூகம் வெறும் கனவாகத்தானிருக்க முடியும்,"

என்றும் அந்தக் காங்கிரஸ் உறுப்பினர் இடித்துரைத்திருக்கிறார்.

"இந்தியாவில் இருப்பதைப் போன்று, குறைந்தபட்சச் சம்பளம் பெறுவோருக்கும், அதிகபட்சச் சம்பளம் பெறுவோருக்குமிடையில் உள்ள வேறுபாடு, வேறு எந்த நாட்டிலும் அத்தனை அதிகமானதாக, திடுக்கிடக்கூடியவகையில் இருக்கவில்லை"

என்று, புள்ளி விவரங்களை அள்ளி வீசிப் பேசினாராம், அந்தக் காங்கிரஸ் உறுப்பினர்.

"இரண்டாம் திட்டத்திற்காக மக்கள் 'தியாகம்' செய்ய வேண்டும் என்று கோரப்படுகிறது; ஆனால், உயர்ந்தோருக்கும் — தாழ்ந்தோருக்கும் இடையில் உள்ள இந்த பெரும் பிளவு தூர்க்கப்பட்டாலன்றி மக்களின் ஒத்துழைப்புக் கிடைப்பது என்பது துர்லபந்தான்"

என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

மின்சார சாதனத் தொழிற்சாலை சென்னையில் அமையாது

போபாலில் அமைக்க முடிவாகிவிட்டதாம்

'தென்னாட்டில்தான் அலுமினியம் தொழிற்சாலை அமையப் போகிறது,' என்று கூறினார்கள். இல்லை; ஹிராகுட் திட்டத்துடன் அந்தத் தொழிற்சாலை நிர்மாணமும் சேர்ந்துவிட்டது என்று செய்தி வந்தது சில நாட்களுக்கு முன்பு!

கன ரக மின்சார இயந்திர உற்பத்தித் தொழிற்சாலை சென்னையில் (ஆவடியில்) அமையும் என்று தமிழ் நாட்டு மந்திரிகள் ஆசை காட்டினார்கள். 'டில்லிக்குத் தெரிவித்துவிட்டோம்—தேவையை,' என்றார்கள்; ஆனால், அங்குள்ள தேவதைகள், மின்சார இயந்திரத் தொழிற்சாலை சென்னையில் அல்ல—எங்கள் வடநாட்டில்தான் என்று கூறிவிட்டனர்.

கனம் சுப்பிரமணியங்கள், இனி, மிட்டாய் என நினைத்துக்கொண்டு, எந்த விரலை சப்புக்கொட்டிச் சுவைத்துக்கொண்டிருக்கப் போகிறார்களோ? தெரியவில்லை.

25 கோடி ரூபாய் செலவில் அமையும் மின்சார சாதன உற்பத்தித் தொழிற்சாலை போபாலில் அமையும் என்று டில்லி முடிவெடுத்து விட்டதாம்.

நிபுணர்கள் தந்த சிபாரிசின் பேரிலேயே போபால் தேர்ந்தெடுக்கப்பட்டதாம் – பொருளாதார, பூகோள காரணங்களுக்காக!

மத்திய சர்க்கார் உற்பத்தி இலாகா தகவலைத் தந்துள்ளது.

தொழிற்சாலை நிறுவுவதற்காக ரூ. 36·5 இலட்சம் பணம்கூட வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டு விட்டதாம்.

தொழிற்சாலைக்குத் தேவையான நிலம் வாங்குவது, தொழிலாளர்களைப் பயிற்றுவிப்பது போன்ற வேலைகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றனவாம்.

எதேச்சாதிகாரத்தின் எதிரொலி

2742 குண்டுகள் சுட்டனர்

பம்பாய் துப்பாக்கிப்பிரயோகம் பற்றிய விவரம்

2,742 குண்டுகளை துப்பாக்கிகள் கக்கினவாம்—பம்பாயில், அண்மையில் மராட்டியர் உரிமை கோரி கிளர்ந்தெழுந்தபோது!

79 பேர்களின் உயிர்களைக் குடித்த அந்தக் குண்டுகள், 312 பேர்களைப் படுகாயப்படுத்தியிருக்கிறது.

442 முறைகள் துப்பாக்கிகளை வெடித்து இந்த வெறியாட்டம் ஆடியிருக்கின்றனர், பம்பாய் சர்க்கார்—அகிம்சாமூர்த்திகள்!

இந்தத் தகவல்களை எல்லாம் தந்திருப்பவர் பம்பாய் முதன் மந்திரி மொரார்ஜி தேசாய்தான்.

சட்ட சபையில்தான் இந்தத் தகவல்களைத் தந்திருக்கிறார்.

குண்டுகளுக்குப் பலியானோர் பற்றிய விவரங்கள் அத்தனையையும் விளக்கமாகக் கூறினாராம், அந்த முதன் மந்திரி!

'போனஸ்' பெற 30,000 தொழிலாளர் மறுப்பு

ராஷ்ட்ரீய ஆலை மஜ்தூர் சங்கமும், பஞ்சாலைகளும் செய்துக்கொண்ட ஒப்பந்தத்தின்படி, ஆலை நிர்வாகிகள் 'போனஸ்' வழங்கிய போது சுமார் 30,000 தொழிலாளர்கள் அதைப் பெற மறுத்துவிட்டனர்.

பம்பாயில் நர்சுகள் பட்டினிப் போர்

கிராமங்களில் வேலைசெய்ய மறுப்பு

பம்பாய், மார்ச் 16—

பம்பாய் சர்க்கார் மருத்துவமனைகளில் வேலை செய்யும் 'நர்சு'கள் தங்களில் பலரை கிராமங்களில் உள்ள சுகாதார நல விடுதிகளுக்குக் கட்டாயமாக உத்தியோக மாற்றம் செய்ததை எதிர்த்து, நேற்று ஒரு நாள் உண்ணாவிரதம் மேற்கொண்டனர் என்று தெரியவருகிறது.

தூதுக் குழுக்கள் அனுப்பியும், இதர முறைகளைக் கையாண்டும் சர்க்காரின் முடிவு மாறாததால் தான் இந்த நேரடி நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டதாகத் தெரிய வருகிறது.

'நர்சு'கள் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர், கிராமங்களில் 'நர்சு'களுக்குப் போதுமான வாழ்க்கை வசதிகள் கிடைப்பதில்லை என்றும், அங்கு பெரும் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறதென்றும் பத்திரிகையாளரிடம் தெரிவித்தாராம்.

பாகிஸ்தானிலிருந்து ஓடிவருவோர் தொகை அதிகரிக்கிறது

கல்கத்தா, மார்ச் 15—

பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு ஓடிவருவோர் தொகை உயர்ந்துகொண்டே செல்கிறதாம்.

இந்த ஆண்டு ஜனவரித் திங்களில் 20,000 பேர் ஓடிவந்தனர்; ஆனால் பிப்ரவரித் திங்களில் இவர்களின் எண்ணிக்கை 50,000 ஆக உயர்ந்திருக்கிறது.

இந்த எண்ணிக்கை உயர்வு வெறும் எச்சரிக்கை தருவதாக மட்டுமில்லையாம்; அதற்கு மேலாகவும் உள்ளதாம்.

பாகிஸ்தான் ஒரு இஸ்லாமியக் குடியரசாகப் பிரகடனம் செய்யப்படவிருப்பது இதற்குக் காரணமாக இருக்கலாமாம்.

இந்தியா இப்படியே கணக்கற்றோரை வரவேற்றுக்கொண்டிருக்க இயலாதாம்; எந்த நாடும், இப்படி பலரைக் குடியேற்றிக்கொள்வது சாத்தியமானதல்லவாம்.

இங்கு ஓடி வருபவர்களை, 'ஊர் சுற்றி'களாக ஆக்கி வைக்க இந்தியா விரும்பவில்லையாம்!

புதிய ஞானோதயம் பெற்றவர் போலப் புலம்பியிருக்கிறார், இப்படியெல்லாம் — பாகிஸ்தானில் உள்ள இந்திய சர்க்கார் தூதுவரான சி. சி. தேசாய்!

வசூலித்த அபராதம் திருப்பித் தரப்படும்

'ஐதராபாத்' இந்தியாவுடன் இணைய வேண்டுமெனப் போராடிய காங்கிரசாரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களின் வித்து முதல், வசூலிக்கப்பட்ட அபராதப் பணம் இவற்றைத் திரும்பத் தருமாறு, சர்க்கார், மராத்வாடியில் உள்ள மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

ஐதராபாத்மீது 'போலீஸ் நடவடிக்கை' எடுப்பதற்கு முன்பு 1947-48-ம் ஆண்டில் ஐதராபாத்திலிருந்த 'லாயக் அலி' சர்க்கார், ஐதராபாத் இந்தியாவுடன் இணைய வேண்டுமென்று கோரிய காங்கிரசார்மீது அடக்கு முறைகளை ஏவிய போதுதான் இந்தப் பறிமுதலும், அபராத வசூலும் நடைபெற்றன என்பது நினைவுகொள்ள வேண்டியதாகும்.

சட்டசபையில் உள்ள காங்கிரஸ் உறுப்பினர்கள் முறையிட்டதின் பேரில்தான், இந்த திருப்பித்தரும் உத்தரவைபிறப்பித்திருக்கின்றனர்.

ரூ. 287 கோடியை விழுங்கிய அகதிகள்

அகதிகள் என்று கூறிக்கொண்டு, பாகிஸ்தானிலிருந்து ஓடிவரும் இந்துக்களுக்கு, இந்தியாவில் வாழ்வு தருவதற்காக இதுவரை, இந்தியப் பேரரசு செலவழித்துள்ள தொகை எவ்வளவு தெரியுமா? 280·7 கோடி ரூபாய்!

1955-ம் ஆண்டு இறுதியில், இந்தியாவுக்கு ஓடிவந்த 'அகதிக'ளின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 36·7 இலட்சம்! 1955 ஆண்டில் 3·61 இலட்சம் பேர் ஓடிவந்திருக்கிறார்கள். இப்படி ஓடி வந்துகொண்டிருப்போருக்கு இங்கு வாழ்வு தருவதற்காக இந்த ஆண்டிலும் ரூ. 341 கோடி செலவிடுவதென உத்தேசிக்கப் பட்டிருக்கிறதாம்!

இந்தத் தகவல்களை அகதி புனரமைப்பு இலாகா மந்திரியின் ஆண்டறிக்கை தருகிறது.

தமிழ் தந்தி துவக்கம்

கொழும்பு, மார்ச் 13—

இலங்கையில் தமிழில் தந்திப் போக்குவரத்து ஆரம்பமாகியுள்ளது என்ற மகிழ்ச்சிகரமான செய்[illegible] வந்துள்ளது.

சைப்ரசில் பொது வேலை நிறுத்தம்

சைப்ரஸ் விடுதலை இயக்கத் தலைவரான மகாரியஸ் பாதிரியாரை வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் நாடு கடத்தியதை எதிர்த்து சைப்ரஸ் முழுவதும் பெரும் ஆர்ப்பாட்டமும், வேலை நிறுத்தமும் நடைபெற்றிருக்கிறது.

இதுவரை எப்போதும் நடைபெறாத அளவு மகத்தானதோர் பொது வேலைநிறுத்தம் இன்று நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 16—3—'56 வெள்ளி

முற்றிவிட்ட மொழி வெறி!

பெற்ற தாய் தந்தையரோடு பேசி மகிழ உதவாது.

உற்றாரோடு, நண்பரோடு உரையாடி உறவாட [illegible]யோ கப்படாது.

வாய்த்த மனைவி[illegible]ாடு கொஞ்சி மகிழப் [illegible]ன் படாது.

குழவி அந்த மொழ[illegible]ல் மழலை வழங்காது.

நாட்டில் அந்த மொழி எதற்கும் பயன்படாது. ஏட்டளவோடு சரி. இப்படிப்பட்ட வழக்கற்றுப் போன ஒரு மொழியை செத்துப்போன மொழி, சவமொழி என்று அழைக்காமல் வேறெப்படி அழைப்பது? பேசாதவனை, பேசமுடியாதவனை ஊமையன் என்பதில் தவறென்ன? 'தவறு, தவறு. பேச முடியாதவன் ஊமையன் அல்ல' என்று சீறுகிறார்கள் சவமொழியினர், 'சமஸ்கிருத' விற்பன்னர்கள்.

'அவர்கள் எல்லாம் கிடக்கட்டும், தொண்டு கிழத்தைத் தூக்கி மணையில் வை' என்பது போல, இன்று இந்தியாவில் சமஸ்கிருத மொழி மீண்டும் பவனி வரச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை குறித்து முன்போர் முறை நாம் இங்கு எழுதியிருந்தோம்.

ஆரியோத்தமர்கள், இந்த இருபதாம் நூற்றுண்டிற்கு எவ்வகையிலும் ஒவ்வாத கருத்துக்களையே மிகுவாகக் கொண்ட வேத, புராண, இதிகாசங்களை மட்டுமே கொண்ட, அல்லது அவற்றில் மட்டுமே இடம் பெற்றிருக்கிற சமஸ்கிருத மொழி, மணவினைக்குப் பொருத்தமில்லாத கிழவிக்கு மண முடிப்பது போல, 'அரியாசனம் ஏறவேண்டும்—அரசோச்சவேண்டும்' என்று விரும்புகிறார்கள். அவர்களின் பேதமைக்காக நாம் அனுதாபப் படுகிறோம்.

இன்று பொதுவாக இந்தியத் துணைக்கண்டத்திலும், குறிப்பாக திராவிடத்திலும், சமூகத் துறையில் நிலவுகிற கேவலமான மூடப் பழக்க வழக்கங்கள், ஆழமான பிளவுகள், புரையோடிப் போயிருக்கிற சீர்கேடுகள் முதலியவற்றிற்கெல்லாம் வித்திட்டவர்களை மூதாதையர்களாகக் கொண்ட இன்றைய ஆரிய இனப் பிரதிநிதிகள், தங்களின் முழு ஆற்றலையும் செலவிட்டு, சவமொழியை புதைகுழியிலிருந்து கிளப்பி, உயிரூட்டி நாட்டில் உலவவிடப் பிரயத்தனம் செய்கிறார்கள். பரிதாபப்படுகிறோம், அவர் தம் செயல் கண்டு!

சவமொழியை ஒரு காலத்தில் 'குறிப்பிட்ட ஒரு இனத்தவரைத் தவிர சமூகத்தில் இதரர்கள் கற்றுக்கொள்ளலாகாது; அப்படிக் கற்றுக்கொள்பவர்கள் கண்களை அவிக்க வேண்டும். வேதபாராயணத்தைக் கேட்பவர்கள் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும்' என்று சட்டம் விதித்தனர், ஆரியோத்தமர்கள். அவர்களின் இன்றையச்சந்ததியினர், வழக்கற்று, செத்துப் போய்விட்ட அந்த மொழிக்கு உயிரூட்ட எல்லா மக்களும் உதவ வேண்டும் என்று கேட்கின்றனர். என்ன நியாயமோ? எந்த அவசியத்திற்காகவோ?

சவமொழியில், கணிதம், வான சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், முதலியன வெல்லாம் இருப்பதாகக் கதைக்கும், சமஸ்கிருதப் பண்டிதர்கள், இந்த சவமொழிச் சாத்திரங்கள் எல்லாம், அந்தந்தத் துறையில் நவீனகால வளர்ச்சிக்கு எந்த வகையால் பயன்படத்தக்கன என்பதை விளக்க முடியாதவர்களாயிருக்கின்றனர்.

'இந்தியாவின் பண்டைக் கால கலாச்சாரத்தை அறிய வேதங்கள் உதவும்,' என்று கூறுகிறார்கள். இருக்கலாம்; ஆனால், அந்தப் பண்டைக்கால கலாச்சாரம் என்று 'தாங்கள் கூறுவது ஆரியக் கலாச்சாரம் என்பதையும், அந்த ஆரிய கலாச்சாரத்தின் உள்ளடக்கத்திற்கு முற்றிலும் மாறுபட்ட வேறொரு கலாச்சாரம், திராவிடப் பண்பாடு என்பதையும், சவமொழியினர் கூறியாக வேண்டும். இன்று 'இந்தியாவின் கலாச்சாரப் பெருமை' என்று கொட்டுமுழக்கோடு, கூறப்படுவதெல்லாம் ஆரியக் கலாச்சாரமே தவிர திராவிட கலாச்சாரமல்லவே. எனின் ஆரிய கலாச்சாரத்தைக் கூறும் சவமொழியை உயிர்ப்பிக்கும் முயற்சிகளுக்கு வேறுபட்ட கலாச்சார மக்கள் எந்த அவசியம் கருதி உதவ வேண்டும்? திராவிடரை 'கீழானோர், மிலேச்சர்கள், தாசி மக்கள்' என்று கருதி நடத்தி வந்தார்களே அந்த 'புண்ணியத்'திற்காகவா?

சவமொழி இன்று, தங்களை ஆரிய இனத் தோன்றல்கள் என்று பெருமையோடு அழைத்துக்கொள்ளும் பார்ப்பன மக்களில் ஒரு கணிசமான எண்ணிக்கையினருக்குக் கூட புரியாத மொழியாகத்தான் உள்ளது. அந்தச் சவமொழியை, பார்ப்பன மக்கள் கூட, கற்றறிந்து கொள்வதினால், காணப்போகும் பலனும் ஏதுமில்லை.

சவமொழி வேதங்கள், சாற்றும் பெரும் 'நீதி'களையும், வாழ்க்கையின் சாரங்களையும் அறிந்து கொள்வது, இன்னும் சமூகத்தில், வேற்றுமைகளை, பிளவுகளை, சீர்கேடுகளை, அறியாமையை வளர்க்கவே உதவுவதாகும்.

இப்படி எந்த ஒரு உருபலனையும் பெரும் பகுதி மக்களுக்குத் தரவியலாத முயற்சியில், இன்றைய பார்ப்பன மக்கள் ஈடுபட்டிருப்பது, அவர்களது முற்றிவிட்ட மொழி வெறியையே காட்டுகிறது.

ஜெர்மன் நாட்டுப் புலவரையும் கவர்ந்திருக்கிறது என்று, இங்கு அங்கிருந்து ஒருவரை அழைத்து வந்து பேசச் சொல்லி, 'பார்த்தீர்களா, நமது பழம் மொழியின் சிறப்பை?' என்கிறார்கள். வேடிக்கையாக இல்லையா?

ஜெர்மானிய நாட்டு சவமொழிப் புலவர்கள், இங்கு அடிக்கடி வந்துபோக வேண்டுமாம். எதற்கு? அவர்களது வருகையால், வருகிற அவர்கள், பிணத்தின் பெருமை சாற்றினால், இங்குள்ளோருக்கு பிணத்தின் மீது 'காதல்' பிறக்குமாம். வெட்கமின்றிக் கூறியிருக்கிறார் ஒரு பார்ப்பன குல ரட்சகர்!

அமிர்தசரஸ் காங்கிரஸ் மாநாடு

தலைவர்கள் பாதுகாப்புச் செலவு மட்டும் ரூ.270000

சந்திகர், மார்ச் 15—

அமிர்தசரஸ் நகரில் கூடிற்றே காங்கிரஸ் மாநாடு. அந்த மாநாட்டிற்கு வந்திருந்த தலைவர்களுக்கு பாதுகாப்பிற்காக மட்டும் எவ்வளவு செலவாயிற்றும் தெரியுமா?

ரூ. 2,70 000 தலைவர்களுக்கு பாதுகாப்புச் செலவு மட்டும் இவ்வளவு.

இது அங்கு குவிக்கப்பட்ட போலீஸ் பட்டாளம் அவ்வளவிற்குமான செலவு என்கிறீர்களா? அதுதான் இல்லை. வேறு மாநிலங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட போலீஸ் பட்டாளத்திற்கான செலவு இதில் சேரவில்லை. எத்தனை பேர் வெளி மாநிலங்களிலிருந்து கொண்டு வரப்பட்டனர் தெரியுமா? 2000 போலீசார் வெளி மாநிலங்களிலிருந்து அமிர்தசரஸ் நகருக்கு வரவழைக்கப்பட்டிருந்தனராம். இவர்களுக்கு எத்தனை இலட்சம் செலவு செய்யப்பட்டதோ? அது தெரியவில்லை.

இந்த தகவல்களை பஞ்சாப் சட்டசபையில் முதன் மந்திரி கெய்ரான் தெரிவித்திருக்கிறார்.

சென்னை—இரங்கூன் கப்பல் போக்குவரத்து!

சென்னை, மார்ச். 13—

சென்னைக்கும் இரங்கூனுக்குமிடையில் கப்பல் போக்குவரத்து 'சிர்தியா கம்பெனி'யினால் இம்மாத இறுதியில், மீண்டும் துவக்கப்படுமென எதிர்ப்பார்க்கப் படுகிறதாம்.

இந்த வழியில், "சோனவதி" என்ற கப்பல் விடப்படுமாம் வேறு கப்பல் விடுவதுக் குறித்து யோசிக்கப்பட்டு வருகிறதாம்.

'இந்தி வெறியர்களே சீக்கியர் எதிர்ப்புக்குக் காரணம்'

'பாகிஸ்தான் ஆக்கிரமிப்புகளைக்காட்டி சீக்கியர் பணியவைக்கப்பட்டனர்'

இரு மொழி பஞ்சாப் ஏற்பாடு குறித்து 'தமிழ் நாடு' தரும் விளக்கம்

"இதுகாறும் தீர்க்கப்படாதிருந்த சிக்கல்களில் ஒன்றான பஞ்சாப் மொழிவழி மாகாணத்தைக் குறித்து இப்போது உடன்பாடான முடிவு ஏற்பட்டிருப்பது மன நிறைவளிக்கத் தக்கதாகும்.

"பஞ்சாப் மொழிவழிக் கொள்கையில், தமக்கென ஒரு தனி மாகாணம் வேண்டுமென்பது சீக்கியர்களுடைய வேண்டுகோள். அம்மாகாணத்தில், பஞ்சாபி மொழி, அதுவும் குருமுகி எழுத்துக்களால் எழுதப்பட்ட பஞ்சாபி மொழி, ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற கொள்கையை அவர்கள் ஒரு சிறிதும் விட்டுக் கொடுக்கமறுத்துவந்தார்கள்.

"இவ்வெழுத்து உணர்ச்சிப் போராட்டத்தில், சீக்கியர்களை எதிர்த்து வருகிறவர்கள் இந்தி மொழிப் பிடிவாதக்காரர்கள். பஞ்சாபி மொழியைத் தம்முடைய எழுத்துக்களில், அதாவது, தேவநகிரி எழுத்துக்களிலும எழுதலாம் என்பது அவர்களுடைய கோரிக்கை. இக்கோரிக்கையில் அவர்கள் வெற்றி பெற்றதோடு மட்டுமல்லாமல், இந்தி மொழியும் புதிய பஞ்சாப் மாகாணத்தில் மற்றொரு ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற மாபெரும் வெற்றியையும் அடைந்திருக்கிறார்கள்.

"பாகிஸ்தானால் ஆக்கிரமிக்கப்பட்டு இஸ்லாமியக் கொள்கைக்கும், உருது மொழிக்கும் அடிமைப்படுவதைவிட, இந்தி மொழியாளர்களுடைய பிடிவாதக் கொள்கைக்கு ஆட்படுவதே சாலச்சிறந்ததாகும் என்ற கருத்து இந்தியப் பேரரசுத் தலைவர்களால் சீக்கியர்களுடைய உள்ளத்தில் நன்கு வற்புறுத்தப்பட்டு, வேரூன்றப்பட்டது.

"இதற்காகவே, பாகிஸ்தானுடைய ஆக்கிரமிப்பைக் குறித்து பெருத்த பிரசாரமும் மிகுந்த ஆரவாரமும் செய்யப்பட்டன என்று தெரிகிறது. இத்தகைய எல்லையோரப் பாய்ச்சல் நில ஆக்கிரமிப்பு, இதற்கு முன் பல தடவை நேர்ந்திருப்பதாகத் தெரிகிறது. அவற்றைக் குறித்து யாதொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. பெருத்த அறிக்கைகளும், எச்சரிக்கைகளும் வெளியாகவில்லை.

"அண்மையில் நேர்ந்த ஆக்கிரமிப்பை நன்கு பயன்படுத்தி சீக்கியர்களை அச்சுறுத்தி, அவர்களுடைய நீண்டகாலக் கோரிக்கைகளைத் தியாகம் செய்யும்படியான நிலைமையை ஏற்படுத்திய இந்திய பேரரசின் அரசியல் தந்திர முறையே இம்முடிவிற்கு முக்கிய காரணமென்றால் அது மிகையாகாது.

"எதுஎப்படியானாலும், உடன்பாடான முடிவு ஏற்பட்டது குறித்து மகிழ்ச்சியடையத்தான் வேண்டும். இதனால் அரசியலாருக்கும் மக்களுடைய கருத்திற்கும் இடையேயுள்ள முரண்பாடு மறைந்து போகின்றது. இதைப் போன்ற ஏற்பாடுகள் மற்றச் சிக்கல்களைக் குறித்தும் செய்யப்படுமானால், அதைப்பற்றி யாரும் குறைகூற முடியாது. அரசியலாரின் கருத்தை மக்களின் மேல் சுமத்தும் வல்லாட்சி முறையைத்தான் நாம் கண்டிக்கிறோமேஒழிய, மக்களின் கருத்தை மாற்றி உடன்பாடான முடிவு ஏற்படுவது பாராட்டுதலுக்குரிய கொள்கையேயாகும்.

"சீக்கியத் தலைவர்கள் ஒப்புக்கொண்டுள்ள ஏற்பாட்டைப் பற்றி அவர்களுடைய உள்ளத்திலேயே சில ஐயங்கள் தோன்றியுள்ளன என்று சீக்கியப் பெருமன்ற நடவடிக்கைகளிலிருந்து புலப்படுகின்றது. அவ்வையங்களை நீக்குவதற்கு அவர்கள் சில பாதுகாப்புக்களைக் கோரியுள்ளார்கள். அப்பாதுகாப்பின்படி இந்தி மொழிப் பிடிவாதக்காரர்கள் நடந்துகொள்வார்களா என்பது காலஞ்செல்லச் செல்லத்தான் தெரியும். பஞ்சாப் சிக்கல் தீர்ந்தது. மராட்டியர்களுடைய சிக்கலாகிய பம்பாய் நகரத்தின் எதிர்காலமும் தமிழர்களுடைய சிக்கலாகிய தேவிகுளம், பீர்மேடு பகுதிகளின் இணைப்பும் எஞ்சி நிற்கின்றன.

"இவற்றை மக்கள் கருத்திற்கேற்றவாறு உடன்பாடான முடிவு ஏற்படும் நன்னாளை நாம் எதிர்பார்க்கின்றோம்."

என்று, 14—3—56-ல் வெளிவந்த 'தமிழ் நாடு' இதழ் கருத்தறிவித்திருக்கிறது.

கல்வித் துறையில் முன்னேற்றமே இல்லை

ஆங்கிலக் கல்வியைத் தடுப்பது விவேகமானதல்ல

ஒரு வடநாட்டு மகாமகோபாத்தியர் கருத்து

"அறிவுப் பொக்கிஷமான ஆங்கில மொழியைக் கற்பதற்கு தடை விதிப்பது, கட்டுப்பாடுகள் போடுவது விவேகமானதல்ல. அதே நேரத்தில், இந்திய மொழிகள் பலவும் வளமுற எல்லா வழிகளாலும் முயற்சிக்கவும் வேண்டும். ஆனால் இந்திய மொழிகள் வளரவேண்டும் என்பதற்காக ஆங்கிலத்திற்கு தடைகள் விதிக்கவேண்டும் என்பது, அவசியமானதல்ல,"

என்று, மகாமகோபாத்தியாய டி. வி. பொத்தார் என்பார் நாசிக் நகர உயர்நிலைப் பள்ளி ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் கூறியதாவது:—

"என்ன கற்றுத் தர வேண்டும் என்று நிர்ணயிப்பதில், கல்வி நிறுவனங்களுக்கு சர்க்கார் அதிகபட்சமான உரிமை வழங்க வேண்டும்.

"சர்க்கார் பாடப் புத்தகங்களின் அளவையும் விலையையும்கூட நிர்ணயித்திருக்கிறார்கள். என்றாலும், சுதந்திரம் பெற்ற பிறகு இந்தியா கல்வித் துறையில் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றமடைந்திருக்கிறது என்று கூறுவதற்கில்லை."

மாவட்டதோறும் போக்குவரத்து 'போர்டு'

சென்னை, மார்ச் 13—

எல்லா மாவட்டங்களிலும் போக்குவரத்து 'போர்டு'கள் அமைக்க சர்க்கார் தீர்மானித்திருப்பதாக போக்குவரத்து அமைச்சர் பி பரமேசுவரன் சென்னை சட்டசபை கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்.

இதை நடைமுறையில் 6 மாதத்திற்கு நடத்திப் பார்த்தப் பின்னரே, மறு பரிசீலனை செய்யப்படுமாம்.

கவர்னர் வேலையில் உள்ள கடினம்!

முன்ஷி கூறுகிருர்

"அரசியல் சட்டம் விதிக்கிற கட்டுப்பாடுகளுக் குட்பட்டு கடமைகளை நிறைவேற்ற வேண்டிய கடினமான வேலையை கவர்னர்கள் செய்யவேண்டி யிருக்கிறது. மாநிலத்தில் அல்லது நிர்வாகத்தில் நடைபெறும் முக்கியமான நிகழ்ச்சிகளை கவர்னர் தெரிந்திருக்க வேண்டும். அதேபோது, நிர்வாகமும், ஜனநாயக அமுலும் வெற்றி பெறச் செய்ய மந்திரிகளுக்கு உதவ தனது செல்வாக்கைப் பயன்படுத்தவும் வேண்டும்,"

—என்று, உ. பி. கவர்னரான கே. எம். முன்ஷி பாட்னு பல்கலைக் கழகத்தின் பொது நிர்வாகக் கழகச் சார்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"அரசியல் சட்ட உரிமைகளை பாதுகாக்கும் காவல் நாயாகவும் கவர்னரிருக்கிருர்.

"மாநிலத்தின் அடிக்கடி மாறி வரும் பிரச்சினைகளையும் கண்காணித்தாக வேண்டும்—மேலும் தனது சர்க்காரின் கொள்கைகளை குறித்து மக்கள் என்ன கருதுகிருர்கள் என்பதையும், உண்மைப்பாகக் கருதியாகவேண்டும்.

"இவை எல்லாம், முதன் மந்திரி மற்றும் இதர மந்திரிகளுக்கு அவ்வளவு பொறுப்பானவையோ அவ்வளவு கவர்னருக்கும் பொறுப்பானவை ஆகும்.

"ஒரு ஜனநாயக ஆட்சி முறை வெற்றி பெறுவதற்கு, மந்திரிசபையின் கூட்டுப் பொறுப்புத்தான் முதல் தேவையாகும்."

[குறிப்பு:—மத்திய பிரதேச கவர்னரான பட்டாபி சீதாராமையா, அண்மையில் புது டில்லியில் நடைபெற்ற கவர்னர்களின் ஆண்டு மாநாட்டில் பேசுகையில், 'கவர்னர்களுக்கு மாநில ஆட்சி நிர்வாகம் குறித்து எதும் தெரிவதில்லை. அன்றுடச் செய்திப் பத்திரிகைகளைப் பார்த்தே மாநிலத்தில் நடப்பவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டியுள்ளது. மந்திரி சபையினர் தாங்கள் செய்யும் காரியங்கள் குறித்து கவர்னர்களுக்குத் தெரிவிப்பதே இல்லை' என்று குறைபட்டுக்கொண்டது நினைவிருக்க வேண்டிய ஒன்று.]

சித்த ரஞ்சன் எஞ்சின் தொழிற்சாலை

புதுடில்லி, மார்ச். 14—

"சித்த ரஞ்சனில் உள்ள இரயில்வே எஞ்சின் தொழிற்சாலை விரைவில்—முற்றிலும் இந்திய ராலேயே நடத்தப்படும்"

என்று, மத்திய சர்க்கார் இரயில்வே அமைச்சர் லால் பகதூர் சாஸ்திரி அறிவித்துள்ளாராம்.

கங்காணி சங்க செயலாளர் பட்டினிப் போர்

மூனுர், மார்ச் 12—திரு-கொச்சி கங்காணி 'பெடரேஷன்' செயலாளர் கே. எஸ். சுப்பிரமணியம் இன்று கண்ணன் தேவன் 'கம்பெனி' முன் உண்ணு விரதம் ஆரம்பித்திருக்கிருர். கங்காணி முறையை ரத்து செய்ய கம்பெனிகள் முனைந்திருப்பதையும், சர்க்கார் தலையிடாமலிருப்பதையும், ஆட்சேபித்தே அவர் உண்ணுவிரதம் ஆரம்பித்திருக்கிருர் எனத் தெரிகிறது.

தோழர் சுப்பிரமணியம் தமது உண்ணுவிரத முடிவு குறித்து மார்ச் 8-ந் தேதி கண்ணன் தேவன் 'கம்பெனி' நிர்வாகிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்ததாயும், அதில்

"[illegible] 17-ந் தேதி எழுதிய [illegible] இதுவரையிலும் [illegible] வரவில்லை. எவ்வளவோ, [illegible] கம்பெனி [illegible] தங்கள் சட்டபூர்வமல்லாத [illegible] எனவே மார்ச் 12-ந் தேதியிலிருந்து உண்ணுவிரதமிருக்க முடிவு செய்துள்ளேன்." என்று குறிப்பிட்டுள்ளாராம்.

கைவண்டித் தொழிலாளர் குரலுக்கு துறைமுக நிர்வாகிகள் பணிவு

சென்னை துறைமுகத்திற்குள் உயரமில்லாத தாழ்வான கைவண்டிகள் செல்ல துறைமுக அதிகாரிகள் அனுமதி வழங்கத் தீர்மானித்துள்ளனர். ஆனல் 75 கைவண்டிகளுக்கு மட்டும்தான் தற்போது அனுமதி வழங்கப்படுமாம்.

கைவண்டிகள், இரப்பர் 'டயர்'கள் பொருத்தப்பட்ட இரு சக்கர வண்டிகளாகவும், இருவர் இழுக்கக் கூடியதாக இருக்க வேண்டுமென்றும், பின்னுலிருந்து ஆட்கள் தள்ளும்படி அமைக்கக் கூடாதெனவும், வண்டிப் பாரமும் அரை டன்னுக்கு அதிகமாக இருக்கக்கூடாதென்றும் துறைமுக அதிகாரிகள் நிபந்தனை விதித்துள்ளனர். இரண்டொரு நாட்களில் கைவண்டிகள் துறைமுகங்களுக்கு மீண்டும் செல்லும்.

ஜனவரித்திங்களிலிருந்து துறைமுகத்திற்குள் கைவண்டிகள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது நினைவிலிருக்கலாம்.

நீக்ரோ மாணவிக்கெதிராக எதிர்ப்பை தூண்டிய நிற வெறியன்

பள்ளியைவிட்டே வெளியேற்றப்பட்டான்

மற்றும் 24 மாணவர்கள் மீதும் நடவடிக்கை

டஸ்காலூசா அலபாமா, மார்ச் 15—அலபாமா பல்கலைக்கழகத்தின் முதலாவது நீக்ரோ மாணவி மிஸ் ஆதரைன் லூசியை அந்தப் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கக் கூடாது என நடைபெற்ற எதிர்ப்புக்குத் தலைமைதாங்கிய ஒரு மாணவனை அந்தப் பல்கலைக்கழகம் வெளியேற்றிற்று.

வேறு நான்கு மாணவர்களும் வகுப்புகளிலிருந்து தற்காலிகமாக வெளியேற்றப்பட்டனர் என்றும், கலவரங்களில் பங்கு எடுத்துக் கொண்ட மேலும் 20 பேர்கள்மீது கட்டுப்பாடு மீறி நடந்ததற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்றும் பல்கலைக்கழக தர்மகர்த்தாக் குழு தெரிவித்தது.

லியோனர்டு வில்சன் என்பவர் தான் வெளியேற்றப்பட்ட மாணவர். ஒதுக்கல் முறையை தீவிரமாக ஆதரிக்கும் இவர் மிஸ் லூசியை முதலாவதாக அனுமதித்ததற்கு, இப்பல்கலைக்கழகத்தைப் பல பொதுக்கூட்டங்களில் தாக்கிப் பேசியுள்ளார். தம் செய்கைகளுக்காக வெளியேற்றப்பட்டால் நீதிமன்றத்துக்குச் செல்லப்போவதாக அவர் ஏற்கனவே எச்சரிகை செய்துள்ளார்.

"பல்கலைக்கழகத் தலைவர், ஆசிரியர்கள், நிர்வாகிகள் முதலியோரின் கௌரவத்தைப் பற்றித் தேவையில்லாத அத்துமீறிய பொதுத்தாக்குதலுக்காக" வில்சனை வெளியேற்றுவதாக தர்மகர்த்தாக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தண்டனை அளிக்கப்படும் மற்ற மாணவர்களின் பெயர்கள் வெளியிடப்படவில்லை. விசாரணை செய்யப்பட்டவரும் மாணவர்களில் 3 பேர் ஏற்கனவே பள்ளியிவிட்டகடத்திலிருந்து வெளியேறிவிட்டனர்.

'விசாரணை முடிந்த பிறகு அவர்களுடைய நிலை திருப்தி அளிப்பதாக இல்லாவிட்டால்' அவர்கள் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள் என தர்மகர்த்தா ஜான் ஏ காடல் தெரிவித்தார்.

கடந்த மாத ஆரம்பத்தில் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற எதிர்ப்பு கிளர்ச்சிகளைப்பற்றி 'மேலும் நம்பத்தகுந்த செய்திகள் கிடைத்தால்' மற்ற மாணவர்கள் பற்றிய பரிசீலனை தொடர்ந்து நடைபெறுமென காடல் குறிப்பிட்டார்.

11,000 தொழிலாளர் வேலைநிறுத்தம்

அதிக 'போனஸ்' வேண்டுமென கோரிக்கை

பம்பாய், மார்ச் 14—பம்பாயிலுள்ள 4 பருத்தி ஆலைத் தொழிலாளர்கள் 11,000 பேர்கள் இன்று முதல் வேலை நிறுத்தம் செய்யத் துவங்கியுள்ளாராம். எல்லாத் தொழிலாளருக்கும் குறைந்த அளவு 15 நாள் சம்பளமும், அதிக அளவு 3 மாத அடிப்படைக் கூலியும் 'போனசாக' தரப்பட வேண்டுமென, ஆலைத்தொழிலில் செய்துகொண்ட புது ஜர்து வருட 'போனஸ்' ஒப்பந்தத்தை எதிர்த்தே தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டிருக்கிருர்களாம்.

வேலை நிறுத்தம் புரிந்தவரும் 4 ஆலைகளில் 3 ஆலைகளின் தொழிலாளர்கள் நாளை 15 நாள் 'போனஸ்' பெறுவார்களென்றும், ஆனல், இவர்கள் அதிகம் 'போனஸ்' கோருகிருர்கள் எனவும், ஒரு ஆலையிலுள்ள தொழிலாளருக்கு 'போனசே' கிடையாது என்றும் ஆலை நிர்வாகிகள் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை யெனவும் கூறப்படுகிறது.

துப்பாக்கியை நீட்டிய துரைத்தனத்தார்!

22 தோழர்கள் மீது வழக்கும் தொடுக்கின்றனர்

பிப். 20—அர்த்தாலின்போது, கள்ளக்குறிச்சியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்த துரைத்தனத்தார், கைது செய்துள்ள 22 தோழர்கள்மீது வழக்கும் தொடுத்திருக்கின்றனராம்.

கள்ளக்குறிச்சியில் 5—3—56 வரை இருந்த 144 தடையுத்தரவு முடிந்த பின் கள்ளக்குறிச்சி சிறையிலிருந்து 22 தோழர்களையும் உளுந்தூர்பேட்டை சிறைக்குக் கொண்டுபோனுர்கள். 6—3—56 விருந்து, 7—3—56 மதியம்வரை உளுந்தூர்பேட்டை சிறையில் வைத்திருந்துவிட்டு, 7—3—56 மதியம் சுமார் 3 மணிக்கு தோழர்களை ஜாமீனில் விடுவித்தார்கள். அவர்கள் மீது இ. பி. கோ. 149, 332, 151 பிரிவுகளின்படி ஜோடித்து வழக்குகளை இப்பொழுது இ. பி. கோ. 147, 326 பிரிவுகளின்படி வழக்குத் தொடர்ந்திருக்கிருர்கள்.

மீண்டும் வழக்கு 16—3—56 அன்று நடைபெறும் என்று தெரிகிறது.

வழக்குத் தொடரப்பட்டுள்ள தோழர்கள்:—

மு. பாண்டியன், ரா. கல்லையன், கு. சின்னசாமி, நா. ராமசாமி, கோ. கணேசன், பி. ராமமூர்த்தி, ரா. மனோகரன், நா. ஆள்வார், ஆ. கோவிந்தராசன், த. பழனி, கோ. ரங்கநாதன், காசி, சின்னத்தம்பி, வை. முத்து, தே. சுதேவ், பெரியசாமி, பாலு, செயராமன், பெ. கோபால், சி. சன்னகேசவலு, ம. அங்கமுத்து, மற்றும் எந்தக் கட்சியிலும் சேராத த. மப்புளன் பவர்.

ஆத்தூரை அடுத்த தம்மம்பட்டியில் கடந்த பிப். 20-ந் தேதி துப்பாக்கிப்பிரயோகம் நடைபெற்ற இடத்தைத் தோழர் மு.கருணாநிதி கண்டபோது எடுத்த படம். அருகிலிருப்பவர் தோழர் முல்லை சத்தி.

பாக். குடியரசு தின விழாவிற்கு நேரு செல்வார்

பாகிஸ்தான் குடியரசுப் பிரகடன நாள் விழாவில் கலந்துகொள்ளும்படி பாகிஸ்தான் அனுப்பிய அழைப்பை ஏற்றுக்கொள்வதாக, இந்தியப் பிரதமர் நேரு பாகிஸ்தான் பிரதமருக்குத் தெரிவித்துவிட்டாரெனத் தெரியவருகிறது.

சொந்த இடத்தில் நின்று பேசும் மகிழ்ச்சி

10—3—56 அன்று, சென்னை கழகத் திடலில் நடைபெற்ற கூட்டத்தில் முன்னணி வீரர்கள் ஆற்றிய உரையின் சாரம் சேற்றுத் தந்திருந்தோம்; தொடர்ச்சியாக தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., கே. ஆர். இராமசாமி ஆகியோரது உரை சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

கே. ஆர். இராமசாமி
(அர்த்தாலும் நடிகர்களும்)

"அர்த்தாலில் பங்கு கொள்ள வேண்டுமென எனது சகோதர நடிக-நடிகையரையும் இதர சினிமா தொழிலாளர்களையும் நான் கேட்டுக்கொண்டேன், அறிக்கை மூலம். நடிகர் சங்கத்தவரும், வேலை நிறுத்தத்திற்கு முழு ஆதரவு அளித்தனர். நடிகர்கள் அர்த்தாலில் பங்கு கொண்டு, ஒத்துழைத்தனர். அவர்களுக்கெல்லாம் நன்றி கூறிக்கொள்கிறேன்.

"இன்று எனக்கு, எப்போதும் இல்லாத மகிழ்ச்சி. நமக்கென—தி. மு. கழகத்திற்கென வாங்கப்பட்டிருக்கும் திடலில் நின்று கொண்டு பேசும்போதே இத்தனை மகிழ்ச்சி என்முல், நமது சொந்த திராவிடத்தில்—சுதந்திர திராவிடத்தில் பேசுவது என்பது எத்தனை மகிழ்ச்சிக் குரியதாகிருக்கும்?"

ஏ. கோவிந்தசாமி
(அர்த்தாலும் சட்டமன்ற உறுப்பினர்களும்)

"அர்த்தாலின்போது சட்டமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம் பொது வேலைநிறுத்த வெற்றிக்காக உழைத்திருக்கிருர்கள். அந்த உறுப்பினர்களுக்கு வெல்லாம் நாம் நன்றி தெரிவிக்கிறோம்."

எட்டயபுரத்தில் எம். ஜி. இராமச்சந்திரன்

பாராட்டும்—கொள்கை விளக்கமும்

11—3—56 ஞாயிறு அன்று மாலை 4 மணிக்கு திராவிட முன்னேற்றக் கழக மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. நல்ல வெயில் அடித்துக்கொண்டிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள். இக்கூட்டத்திற்கு தோழர் சு. அருணகிரி தலைமை வகித்தார்.

தோழர் பொன்னம்பலனுர் அவர்கள் பேசிய பின் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையை விளக்கமாக மக்களுக்கு எடுத்துச் சொன்னுர்கள்.

எட்டையபுரம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தோழர் எம் ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு வரவேற்பிதழ் ஒன்றும், கைத்தறி துண்டு ஒன்றும் கொடுக்கப்பட்டது. தோழர் பொன்னம்பலனுருக்கும் கைத்தறி துண்டு போடப்பட்டது.

எட்டையபுரம் நெசவாளர் சங்கத்தின் சார்பில் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு வாழ்த்திதழ் வாசித்தளிக்கப்பட்டது. அத்தக்குடி தி. மு. கழக உட்கிளை, மதித் மன்றம், கோவில்பட்டி சௌந்திரபாண்டியனுர் படிப்பகம், கோவில்பட்டி வட்டம் மில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர், கோவில்பட்டி வேம்பு புரம் ஆரம்பப்பள்ளி மாணவர்கள், எட்டையபுரம் கடலை மட்டி செய்வோர் உற்பத்தி விற்பனை சங்கம், எட்டையபுரம் அண்ணு அகைக்குர் நாடக மன்றம் ஆகிய இவர்களின் சார்பாக கைத்தறி துண்டுகள் போடப்பட்டன.

தோழர் எஸ். கலிங்கன் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

'நேரு பெருமான்' பாதுகாப்பிற்குப் பாழான தொகை

மக்கள் வரிப் பணத்தில் காமராசர் சர்க்கார் நடத்திய வாணவேடிக்கை

'நேரு பெருமான்' தமிழ் நாட்டிற்கு அல்ல—கேரளத்திற்கு வந்தபோது, தமிழ் நாட்டையும் சிறிது தொட்டுவிட்டுப் போனார் அல்லவா? அப்படி அவர் தமிழகத்தைத் தொட்டுவிட்டுப்போன 'தோஷ'த்திற்காக, சென்னை சர்க்கார் ரூ. 2,20,043 செலவிட்டார்களாம்!

அண்மையில் கேரளத்திற்கு போது, கோவை, மலபார், தென் கன்னட மாவட்டங்களில் சில இடங்களுக்கு—நேரு பண்டிதர் போயிருந்தார். அதற்காக அவருக்கான பாதுகாப்பு, பந்தோபஸ்து ஏற்பாடுகளைச் செய்வதற்காகத்தான் இந்த தொகை செலவிடப்பட்டதாம்!

சென்னை நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் சென்னை சட்டசபையில் இத்தத் தகவலைத் தந்திருக்கிறார்.

நாகர் தலைவர் கைது

நாகர் தலைவர்களுள் ஒருவர் நாகமலை அருகில் கடந்த 12-ந் தேதியன்று கைது செய்யப்பட்டுள்ளாராம்.

தலைமறைவாகியுள்ள பிஜோவின் நெருங்கிய சகாவான இன்னுவோனென் என்ற அவர், முன்பு, நாகர் தேசியக் கவுன்சிலின் விளம்பர அதிகாரியாக இருந்தவராம்.

திருச்சி நகர தி. மு. க. ஆண்டு விழா

18—3—56 காலை 9 மணிக்கு, திருச்சி தேவர் மன்றத்தில் மேற்படி விழா தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் மு. கருணாநிதி, கன்னாநாசன் சொற்பொழிவாற்றுவர்.

இசைமுரசு நாகூர்-அனிபா தம் குழுவினருடன் இன்னிசை வழங்குவர்.

—நன்கொடை அணா 4

ரஷ்யத் தலைவர்கள் சென்னை வருகை

சர்க்கார் செலவு ரூ. 1·27 இலட்சம்

சென்னை, மார்ச் 13—

ரஷ்யத் தலைவர்களான புல்கானின், குருஷ்சேவ் சென்னை மாநிலத்திற்கு வருகைதந்ததையொட்டி, சர்க்காருக்கு உண்டான செலவை நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம் இன்று தெரிவித்தார்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் : ரூ. 1,17,470—11—0 ;

பரிசுகள் செலவுக்கு : ரூ. 4,467—14—0 ;

கவர்னர் விருந்தளிப்புச் செலவு : ரூ. 5,829—2—0 ;

மொத்தம் ரூ 1,27,767—11—0

ரஷ்யத் தலைவர்களின் வருகையால் சென்னை சர்க்காருக்குச் செலவாயிற்றும்!

செங்கற்பட்டு-சின்னசேலம் இரயில் பாதை

'சர்வே' நடத்தப்படுமாம்

புதுதில்லி, மார்ச் 15—

சென்னை மாநிலத்தில் சின்ன சேலத்திலிருந்து, கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, வந்தவாசி வழியாக செங்கற்பட்டுக்கு (120 மைல்) தனி பாதை அமைப்பது குறித்த 'சர்வே' நடத்தப்படுமாம். இரண்டாவது 'சர்வே'யில், மானாமதுரையிலிருந்து, அருப்புக்கோட்டை வழியாக விருதுநகருக்கு (50 - மைல்) ஒரு இரயில்வே பாதை போடுவது குறித்து நடைபெறுமாம்.

'இரயில் கார்கள்' விடப்படுமாம்

புதுடில்லி, மார்ச் 15—

தென்னிந்திய இரயில்வேயில், 'இரயில் கார்கள்' விடுவதற்குத் தீர்மானித்திருக்கிறார்களாம். இந்த 'இரயில் கார்'கள் அதிகமாக மக்கள் நெருக்கமுள்ள பகுதிகளில் மட்டுமே விடப்படுமாம்.

கோவையில் அண்ணா ஈ. வெ. கி. சம்பத்

18—3—56 காலை 9 மணியளவில், கோவை நகர தி. மு. கழக நிதிக்காக சிறப்புக் கூட்டம் நடைபெறும்.

அண்ணா, ஈ. வெ. கி. சம்பத் சிறப்பு சொற்பொழிவாற்றுவர்.

இசைச் செல்வி ஜி. கஸ்தூரி இன்னிசை வழங்குவார்.

கட்டணம் ரூ. 1; அணா 8.

குறிப்பு: அன்று மாலை பொதுக் கூட்டம் இல்லை.

துறையூர் தி. மா. மு. கழக ஆண்டு விழா

18—3—56 காலை 9 மணிக்கு, பாரதி தியேட்டரில், துறையூர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக முதலாவது ஆண்டு விழா தோழர் கே. ஆறுமுகம் தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் கே. மதியழகன், தில்லை-வில்லாளன், டி. கே. சீனிவாசன் பேசுவர்.

விவசாயிகள் மாநாடு

18—3—56 காலை 9½ மணிக்கு, வட ஆற்காடு — செங்கற்பட்டு பாலாறு நீர்ப்பாசன விவசாயிகள் 4-வது மாநாடு (வாணியம்பாடி— வ. ஆ), வாணியம்பாடி புளூபர்ட் டாக்கீசில், திரு. எ. எஸ் அய்யங்கார் தலைமையில் நடைபெறும். சென்னை நிலவரி அமைச்சர் எம். ஏ. மாணிக்கவேலு மாநாட்டைத் திறந்து வைப்பார். மாநாட்டில், தி. மு கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், ப ஜீவானந்தம், கே. விநாயகம், எஸ். அண்ணாமலைப் பிள்ளை உள்ளிட்ட சட்டசபை உறுப்பினர்கள் பலரும், பிரமுகர்கள் பலரும் சொற்பொழிவாற்றுவர்.

கழகக் கூட்டம்

★

மையனூர்:

மாரியம்மன்கோயில் திறந்தவெளி —வ. உ. சிதம்பரனார் மேடை

19—3—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: கு. சீத்தாராமன்

பேசுவோர்: என். வி. நடராசன், இர. வாசுதேவன்

அன்று இரவு 10 மணிக்கு, தோழர் என். வி. நடராசன் தலைமையில், 'மனோகரா' நாடகம் நடைபெறும்.

★

செங்கற்பட்டு:

தர்க்கா திடலில்

18—3—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர்: முகவை-ஆர்.எஸ். பாண்டியன், தோழியர் அருண்மொழி

சென்னை 11-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு:

18—3—56 காலை 9 மணிக்கு, கழகப் பணிமனையில் (எண் 88-எ, பிராட்வே) பொதுக் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, வரவு-செலவுக் கணக்கு, கழக வளர்ச்சி பற்றி ஆராயப்படும்.

சென்னை 24-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு:

18—3—56 காலை 10 மணிக்கு, கழக அலுவலகத்தில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, கழக ஆண்டு விழா நடத்துவது குறித்து ஆலோசிக்கப்படும்.

சென்னை 8-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு:

18—3—56 பகல் 3 மணிக்கு, எண். 1, குப்பய்யர் தெருவிலுள்ள கழகப் பணிமனையில், செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

18—3—56 காலை 11 மணிக்கு, உதகை கிரீன்பீல்ட்ஸ் எண் 118 பாண்டியன் படிப்பகத்தில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். 'சமுதாயம்' என்பது பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

திருக்குறள் வகுப்பு

சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை தாய்மார் கழகச் சார்பில், 17—3—56 பிற்பகல் 2-30 மணிக்கு மேல் சென்னை முத்து கிருஷ்ணன் தெரு 15-ம் எண்ணுள்ள இல்லத்தில் திருக்குறள் வகுப்பு நடைபெறும். மயிலை சிவ முத்து அவர்கள் 'வெருவந்த செய்யாமை' எனும் பொருள் பற்றிப் பேசுவார்.

இந்நாள்-முன்னாள் முதன் மந்திரிகள் 'மயிர் பிடி'ச் சண்டை

ஒருவர் மீது ஒருவர் இலஞ்சக் குற்றச்சாட்டு

காங்கிரசாரின் சுயநலப் போக்கு அம்பலம்

நடைபெற்ற ஒரு ஊழல் குறித்து ஒரு மாநிலத்தின் இந்நாள் முதன் மந்திரியும், முன்னாள் முதன் மந்திரியும் 'மயிர்பிடிச் சண்டை'யிலிறங்கியிருக்கிறார்கள்—நேற்று முன் தினம் சட்டசபையில்.

இராஜஸ்தான் மாநில மந்திரி சபை மீதுதான் இந்த லஞ்ச ஊழல் பற்றிய குற்றச்சாட்டு.

சுகாதியா என்பார் இந்த நாள் முதன் மந்திரி; திக்காராம் பலிவால் என்பார் முன்னாள் முதன் மந்திரி.

பலிவால், சுகாதியாமீது இலஞ்சக் குற்றம் சுமத்தியிருக்கிறார். சுகாதியா, தான் அந்தக் குற்றத்தைச் செய்யவில்லை என்றும், பலிவால் காலத்திலேயே இந்த ஊழல் நடைபெற்றதென்றும் கூறியிருக்கிறார். இருவரும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

"சில நாட்களுக்கு முன்பு, இலஞ்ச ஊழல் தாண்டவமாடிற்று. கோபி எனும் இடத்தில் நிலம் வேண்டியிருந்தது சர்க்காருக்கு—ஒரு சதுர கெஜம் 2 அணா விலைக்கு; ஆனால், நிலச் சொந்தக்காரரோ 4 அணா வீதம் கேட்டார்; மனுச் செய்தார்; பின்பு சில நாளில், நிலத்தின் விலை சதுர கெஜம் ரூ. 2—4—0 ஆக உயர்த்தப்பட்டு, நிலச் சொந்தக்காரருக்கு ரூ. 2,50,000 தரப்பட்டிருக்கிறது"

என்று பலிவால் கூறியிருக்கிறார். சதுர கெஜம் 2 அணாவாக இருந்தது ரூ. 2—4—0 ஆக உயர்ந்த வேடிக்கை எப்படியிருக்கிறது பார்த்தீர்களா?

சுகாதியா கூறினாராம்—'இந்த முடிவு பலிவால் முதன் மந்திரியாக இருந்த காலத்தில மேற்கொள்ளப்பட்டிருக்கலாம்;' என்று!

'எனக்கு ஒன்றும் அது பற்றித் தெரியாது' என்றாராம், பலிவால்.

"நான் முதன் மந்திரியாயிருந்தபோது, சுகாதியா ரெவின்யூ மந்திரியாயிருந்தார்; அப்போது ஜெய்பூருக்கு அருகில் உள்ள காடு ஒன்றில் சிலருக்கு நிலம் ஒதுக்குவதாயிருந்தது. ரெவின்யூ மந்திரியான சுகாதியா, அதற்குச் சிபாரிசு செய்திருந்தார்; ஆனால் காட்டிலாகா மந்திரி இது குறித்து விசாரித்துவிட்டு, நிலம் ஒதுக்கக்கூடாதெனக் கூறிவிட்டார்; பின் நான் கிலம் ஒதுக்குவதை ரத்து செய்தேன். ஆனால், மந்திரி சபை மாறியதும், கோரியவர்களுக்கு அந்த நிலம் ஒதுக்கப்பட்டது" என்று பலிவால் கூறியிருக்கிறார்.

உடனே சுகாதியா எழுந்து, 'இல்லை, இல்லை; நான் ஒதுக்கவில்லை; பாலிவால்தான் அப்போதே நிலம் ஒதுக்க சிபாரிசு செய்தார்' என்று ஆத்திரப்பட்டுக் கூறினாராம்.

பலிவால் சும்மா இருப்பாரா? 'இல்லை; முதன் மந்திரி பொய் சொல்லுகிறார். நான் அப்படிச் செய்யவில்லை' என்று கூறினாராம்.

மந்திரிகளாயிருப்போரின் சுயநலப் போக்கு எப்படி இருக்கிறது என்பதை அம்பலப்படுத்தவில்லையா, இது?

இந்தி திணிப்பு நடவடிக்கைகள்

1960 முதல் ஆங்கிலத்துடன் இந்தியிலும் ஆட்சி நிர்வாகம் நடைபெறுமாம்

இந்தியப் பேரரசினர், வெறும் கன்துடைப்பிற்காக நியமித்த ஆட்சி மொழிக் குழுவினர் தங்கள் கருத்தை இன்னும் அறிவிக்காதிருக்கும் நிலையிலேயே, அறிவிக்கும்வரை பொறுத்திருக்க வேண்டும் என்ற வாலாயமான பழக்கத்தைக்கூடப் பொருட்படுத்தாது, வேகவேகமாக இந்தித் திணிப்பு வேலையில் ஈடுபட்டிருப்பது நமக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை.

இதுவரை மேற்கொண்டுள்ள இந்தித் திணிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து புதிய நடவடிக்கை ஒன்றும் மேற்கொள்ளப்படவிருக்கிறதாம். 1960 முதல், ஆங்கிலத்துடன் சேர்த்து இந்தியையும், இந்திய சர்க்கார் நிர்வாக அலுவல் மொழியாக உபயோகிக்கத் துவங்கப்போகிறார்களாம்.

இந்த தகவலை டில்லி மக்கள் சபையில் உதவி கல்வி மந்திரி டாக்டர் கே எல். ஸ்ரீமாலி என்பார் தெரிவித்திருக்கிறார்.

'இந்த நடவடிக்கையின் மூலம், இந்தி, நிர்வாக மொழியாக வளருவதை சோதித்துப் பார்ப்பது சர்க்காரின் நோக்கம்' என்றும் அவர் தெரிவித்தாராம்.

சீக்கியருக்கு எதிராக வெறிக்கூச்சல்

மகா பஞ்சாப் முன்னணியினர் போக்கு

இந்துமத வெறியர்கள் சீக்கியர்களுக்கு எதிராக புது மாநில அமைப்பு விவகாரத்தில் கொக்கரிக்கிறார்கள்.

பஞ்சாப் மாநில அமைப்பிற்கு இறுதியாகக் கூறப்பட்டிருக்கிற மண்டலக் குழு நிர்வாகம் அமைக்கும் திட்டத்தை, மகாபஞ்சாப் முன்னணியினர் எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடத்திவருகின்றனர்.

முன்னணியினர் தலைவர் இந்த திட்டத்தை ஏற்றுக்கொண்டார் என்பதற்காக, அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்போகின்றனராம். திட்டம் முன்னணியினரால் ஏற்றுக் கொள்வதற்கு உரியது அல்ல என்றும் அவர்கள் கூறியுள்ளனராம்.

ஜனசங்கம், மகாபஞ்சாப் முன்னணி ஆகிய இந்துமத வெறிகொண்ட இயக்கங்களின் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில், முன்னணியின் செயலாளரான டி. ஜெயின் என்பார் முன்னணியின் தலைவரான டாக்டர் ஷர்மா முன்னணிக்கு துரோகம் இழைத்துவிட்டார் என்று குறிப்பிட்டதுடன், திட்டத்தை முன்னணி எதிர்க்கும் என்றும், திட்டத்தை ஆதரிக்கிற பஞ்சாப் முதன் மந்திரியான பீமசேன் சச்சாரையும் ஆதரிக்கப் போவதாகவும் பேசினராம்.

கூட்டத்தில், திட்டத்தை ஆதரித்து எழுதிய அம்பாலா ஆங்கில தின இதழின் பிரதிகள் பல கொளுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

திராவிடத்தில் பொங்கும் வளம்!

காவிரிப் பள்ளத்தாக்கில் எண்ணெய் ஊற்று

புதுடில்லி, மார்ச் 15—

"தென்னாட்டில் காவிரி, கிருஷ்ணா—கோதாவரி பள்ளத்தாக்குகளில் 'பெட்ரோல்', மண்ணெண்ணெய் போன்ற திரவப் பொருள்கள் கிடைக்கலாம்" என்று, இந்திய இயற்கைவள விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சர் கே. டி. மாளவியா மக்கள் சபையில், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறியுள்ளார்.

மேற்கண்ட இடங்களில் அடிப்படை பரிசோதனைகள் நடைபெறலாம் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.